## கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 செப்டம்பர் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 07 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 19 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------------

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளுராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கிரிந்த புஹுல்வெல்ல கிராம சபை அலுவலகத்தின் பழைய கட்டிடம் 2013 ஆண்டின் போது உடைத்து அகற்றப்பட்டிருந்தது. எனினும் அவ் ஆதனங்களை குறிப்பிட்ட சொத்துக் கணக்கிலிருந்து அகற்றியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக வீத வரி வருமானத்தை கணக்கீடு செய்யும் போது ரூபா 458,674 தொகையான பில்போடப்பட்ட வருமானத்தை, வருமானச் செலவுக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக குறிப்பிட்ட ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 306,121 தொகையினை கணக்கீடு செய்திருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான ஏக்கர் வரி வருமானத்தை கணக்கீடு செய்யும் போது ரூபா 12,532 இற்கான பில்போடப்பட்ட வருமானத்தினை வருமானச் செலவிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக கிடைத்திருந்த ரூபா 9,847 தொகையினை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2009 அக்டோபர் 01 முதல் 2012 அக்டோபர் 31 திகதி வரை காலப்பகுதி தொடர்பாக ரூபா 1,810,849 நிலுவை கடை வாடகை, 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 182 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பதிவளிக்கப்பட்டிருந்த போதும் அப் பதிவளித்தல் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது மந்திரிமாருக்காக வழங்கியிருந்த மோட்டார் சைக்கிள்களுக்காக மந்திரிமார்களிடம் அறவிடப்பட்டிருந்த ரூபா 180,000 தொகை சம்பளங்கள் மற்றும் படிகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு ஏனைய உதவி கணக்குகளின் கீழ் செலவு வைக்கப்படாதிருந்தமையால் அத் தொகையினால் ஆண்டிற்காக செலவுகள் மற்றும் வருமான குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டுகள் தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 61,233 தொகை கடன்கொடுத்தோர்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) 2012 ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 2,000,000 காணப்பட்டதுடன் இது தொடர்பாக ரூபா 3,290,498 தொகையொன்று கிடைக்கப் பெற்றிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 1,290,498 குறை ஒதுக்கம் திரண்ட நிதியத்துடன் சீராக்கல் செய்யப்பட வேண்டும் எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

--------------------------------------------------------------------------------

07 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,011,138 ஆக காணப்பட்டதுடன், துணைப் பதிவேடுகள் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,167,398 ஆக காட்டப்பட்டமையால் வித்தியாசம் ரூபா 1,843,740 ஆக காணப்பட்டது.

1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 421,235 ஆகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 50,768,719 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------

கணக்குகளில் அடங்கியுள்ள ரூபா 102,486,591 பெறுமதியான பன்னிரண்டு விடயங்கள் தொடர்பாக சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| (அ) | | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| | (i) | விதி 33 | வீதவரி எழுதுவினைஞர்களினால் ஒவ்வொரு காலாண்டு இறுதியின் போதும் தயாரித்து தலைவரின் கையொப்பத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய வீதவரி செலுத்த தவறும் நபர்கள் தொடர்பாக அட்டவணை மற்றும் ஆதனங்களை தடைசெய்தலுக்கான அழைப்பாணை சமர்ப்பித்திருக்கவில்லை. |
| | (ii) | விதி 217-218 | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டங்கள் வருடாந்தம் கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்காக அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (ஆ) | | 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் 2002/02 கொண்ட திறைசேரி செயலாளரின் சுற்று நிருபம் | சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள் கருவிகள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

1.3.7 அதிகாரம் பெற்றுக் கொள்ளப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 132(ஏ) இன் பிரகாரம் வருடத்திற்கான மொத்த கூட்டுத்தொகை ரூபா ஒரு ஆயிரத்தை விஞ்ஞாது சபையினால் மேற்கொள்ளப்படும் செலவு ஒன்று தொடர்பான அமைச்சரின் எழுத்து மூலமான பூர்வாங்க அங்கீகாரத்துடன் செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு மாற்றமாக ஜனாதிபதி பதவியேற்றல் தொடர்பாக 2013 நவம்பர் 21 திகதி ரூபா 25,000 தொகையொன்று செலவிடப்பட்டுள்ளது.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 751,256 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 606,453 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

--------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 2,672 | 560 | 527 |
| வாடகை | 1,340 | 854 | 2,237 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 237 | 144 | 176 |
| ஏனைய வருமானங்கள் | 1,314 | 1,293 | 43,943 |

மேற்குறிப்பிட்டுள்ள நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 9(2) பிரகாரம் பிரதான நிருவாகி ஆகவும், வீதவரி தொடர்பாக சட்டத்தில் 158(1)(ஆ) பிரிவுகளின் பிரகாரமும் செயலாளர் தொழிற்பட வேண்டும் எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

2.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலர்களிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் வெவ்வேறாக இனங்காணக் கூடிய விதமாக பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

--------------------------------------------

(அ) சபையினால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 954,325 தொகையொன்று பல வருட காலமாக சபை நிதியத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) முத்திரைகள் கொள்வனவு செய்தல் மற்றும் பதிவு செய்யும் விடயம் சபை அலுவலக உதவியாளர் ஒருவருக்குச் சாட்டப்பட்டிருந்தது. அத்துடன் முத்திரை பதிவேடு பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் நடைபெறவில்லை. மேலும் 2013 ஆண்டின் போது 07 வரவுகளின் மூலம் கொள்வனவு செய்திருந்த ரூபா 19,200 பெறுமதியான முத்திரை இருப்புக்கள் முத்திரைக் கொள்வனவு செய்யும் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

ஆண்டின் போது சபை அங்கத்தவர்கள் ஆறுபேரும் 12 சபை கூட்டங்களுக்காக ரூபா 438,000 படியொன்று 2013 ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன் தென்மாகாண முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் இலக்கம் 1413/15 மற்றும் 2005 அக்டோபர் 05 திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் விதி 3 இல் 1(ii) ஏற்பாடுகளுக்கு மாற்றமாக கூட்டங்களு க்கு சமுகமளிக்காத அங்கத்தவர்கள் இருவருக்கு ரூபா 89,500 தொகையொன்று கூட்டத்தில் பங்குபற்றியதற்கான படி ஆகச் செலுத்தப்பட்டிருந்தது.

3.3 மனித வள முகாமைத்துவம்

---------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணி மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவியின் வகைகள் | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | மிகை |
|---|---|---|---|
| நிறைவேற்று | 02 | 03 | 01 |
| இரண்டாம் தர | 20 | 19 | - |
| ஆரம்ப | 19 | 9 | - |
| ஏனைய(அமைய, தற்காலிக, ஒப்பந்த) | - | 06 | 06 |
| | 41 | 48 | 07 |

திறைசேரி செயலாளரின் 2002 ஜனவரி 03 திகதி முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபத்தின் இலக்கம் 14 பிரகாரம் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரின் 2006 ஏப்ரல் 10 திகதிய முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபம் 28 இன் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தற்காலிக, அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த அல்லது வேறேதும் அடிப்படையின் கீழ் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தும் பிரதேச சபை அவ்வாறு சேர்க்கப்பட்டிருந்த 07 ஊழியர்களுக்கு 2013 ஆண்டின் போது ரூபா 664,052 தொகையொன்று செலுத்தியுள்ளது.

4. கணக்கு விடயத் தன்மை மற்றும் நல்லாட்சி

-------------------------------------------------------------------

4.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் 2014 செப்டம்பர் 30 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது பின்வரும் முரண்கள் அவதானிக்கப்பட்டன.

| வருமானங்கள் | மதிப்பீட்டு | உள்ளவாறான | முரண் | முரண்களின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | |
| வீதவரி | 2,672 | 560 | 2,111 | 79 |
| வாடகை | 1,340 | 854 | 486 | 36 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 237 | 144 | 92 | 39 |
| சேவைக் கட்டணம் | 155 | 1,649 | 1,494 | 964 |
| எழுத்தாணைக் கட்டணம் | 117 | 16 | 101 | 86 |
| ஏனைய வருமானங்கள் | 3,910 | 2,594 | 1,316 | 34 |
| செலவுகள் | | | | |
| பிரயாணச் செலவு | 283 | 404 | 121 | 43 |
| வழங்கள்கள் மற்றும் உபகரணங்கள் | 1,853 | 1,305 | 547 | 30 |
| போக்குவரத்து தொடர்பாடல் மற்றும் தேவைகள் ஏனைய சேவைகள் | 1,009 | 735 | 273 | 27 |
| உதவி பங்களிப்பு மற்றும் மானியம் | 335 | 204 | 130 | 39 |
| ஓய்வூயம் , ஓய்வூதிய நலன்கள் மற்றும் பணிக்கொடை | 401 | 226 | 175 | 44 |

இதன் பிரகாரம் பாதீடு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தி இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

-----------------------------------------------------------------

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூடியிருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்